கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திரு.பெ.பார்த்தசாரதி, பி.எல்,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை

2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 27-ம் தேதி

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.110/2023

CNR.No.TNSV010026522023

*****

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம் |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | DVC.No.06/2019 |
| மேல்முறையீட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரி | 1. ஜான் கென்னடி, (வயது 38)<br>த/பெ.முருகானந்தம்,<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>2. முருகானந்தம், (வயது 70)<br>த/பெ.இராமசாமி அம்பலம்,<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>3. இருளாயி, (வயது 62)<br>க/பெ.முருகானந்தம்,<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>4. பால் கண்ணன், (வயது 39)<br>த/பெ.முருகானந்தம்,<br>வன்னிகோட்டை காலணி, |

| | |
|---|---|
| | திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>5. ராஜமீனாள், (வயது 35)<br>க/பெ.முருகானந்தம்,<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர் | 1. இளவரசி, (வயது 36),<br>க/பெ.ஜான்கென்னடி,<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>2. மைனர். கனிஷ்காஸ்ரீ, (வயது 9),<br>த/பெ.ஜான்கென்னடி<br>வன்னிகோட்டை காலணி,<br>திருப்புவனம் தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br>( 2-ம் எதிர்மேல்முறையீட்டாளர் அவரது தாயார் மற்றும் இயற்கை பாதுகாவலரான 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் மூலம்) |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | 1-ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு மாத ஜீவனாம்சமாக மாதம் தலா ரூ.10,000/- வீதம் ரூ.20,000/-ஸ்ரீ இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து செலுத்த வேண்டும் என்றும், மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து உத்தரவு தேதி வரையிலான ஜீவனாம்ச நிலுவைத் தொகையை மூன்று தாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், மாதாந்திர ஜீவனாம்சத்தை ஒவ்வொரு ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் எதிர்மனுதாரர் நேரிடையாகவோ, அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ செலுத்த வேண்டும் என்றும், |

| | |
|---|---|
| | வன்னிக்கோட்டை காலனி, கதவு எண்.4/166 வீட்டில் மனுதாரர்கள் வாழ வசிப்பிட கட்டளை வழங்கியும், வன்னிகோட்டை காலனி, கதவு எண்.4/166 வீட்டில் உள்ள மகுதாரது சீர் வரிசை பொருட்களை தீர்ப்புத் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள் ஒப்படைக்க வேண்டும் என்றும், மனுதாரர்களுக்கு 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ரூ.20,000/- இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் 50 சவரன் தங்க நகைகள், இருசக்கர வாகனம் வாங்கக் கொடுத்த ரூ.80,000/- திருமண செலவிற்காக கொடுத்த ரூ.2,00,000/- திரும்பக் கேட்டுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. |
| விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | உறுதிசெய்யப்பட்டது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 08.07.2023 |
| ஆஜராக பணிக்கப்பட்ட நாள் | 13.12.2023 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 10.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 27.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திருமதி/செல்வி.ரேவதி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:38:19 +0530

பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டானது திருப்புவனம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் DVC.No.06/2019-ல் கடந்த 28.03.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை ரத்து அல்லது மாற்றக் கோரி மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்களால் இம்மேல்முறையீடு தாக்கல்.

**<u>2) எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-</u>**

2(i). 1-ம் எதிர்மனுதாரர், 1-ம் மனுதாரரின் கணவர் ஆவார். 2, 3 எதிர்மனுதாரர்கள் 1-ம் எதிர்மனுதாரர்களின் தாயார், தகப்பனார். 4-ம் எதிர்மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரின் சகோதரர், 5-ம் எதிர்மனுதாரர் 4-ம் எதிர்மனுதாரரின் மனைவியாவார். 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் வன்னிக்கோட்டை காலனியில் வசித்து வருகிறார்கள். 1-ம் எதிர்மனுதாரர் திருச்சி பொன்மலை ரயில்வே பாதுகாப்பு படை காவலராக இருந்து வருகிறார். 1-ம் மனுதாரருக்கும், 1-ம் எதிர்மனுதாரருக்கும் திருப்புவனம் புதூர் முஸ்லீம் மகாலில் வைத்து 01.09.2011-ம் தேதி திருமணம் நடந்தது. 30.01.2011-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. திருமணத்தின் போது 1-ம் மனுதாரருக்கு 50 பவுன் நகையும், 1-ம் எதிர்மனுதாரருக்கு 10 பவுன் நகையும், 3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும், பல்சர் வாகனம் வாங்க ரூ.80,000/- ரொக்கமும், திருமணச் செலவிற்கு ரூ.2 லட்சம் ரொக்கமும் எதிர்மனுதாரர் வீட்டினரிடம் 1-ம் எதிர்மனுதாரரின் தாயார் கொடுத்து திருமணம் செய்யப்பட்டது. திருமணம் முடிந்த 10 நாட்களுக்குள் 20 பவுன் நகைகளை, 2, 3 எதிர்மனுதாரர்கள் வற்புறுத்தி பெற்றுக்

கொண்டார்கள். இன்று வரை 3-ம் எதிர்மனுதாரர் வசமே நகை உள்ளது. 1-ம் மனுதாரர் பலமுறை திரும்பக் கேட்டும் 3-ம் எதிர்மனுதாரர் மறுத்துவிட்டார். மற்ற எதிர்மனுதாரர்கள் 3-ம் எதிர்மனுதாரர் வசம் இருக்கட்டும் என மிரட்டல் விடுத்தார்கள். திருமணம் முடிந்த காலம் முதல் எதிர்மனுதாரர்களுடன் கூட்டுக் குடும்பமாகவே இருந்ததாகவும், 10.12.2014-ம் தேதி 2-ம் மனுதாரர் பிறந்துள்ளார். 1-ம் எதிர்மனுதாரர் பணிநிமித்தம் சென்றவுடன், 2, 3 எதிர்மனுதாரர்கள் 1-ம் மனுதாரரை திட்டி தாயார் வீட்டிற்கு விரட்டி விடுவார்கள்.

2(ii). 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அதிக நகை கிடைக்கும் என திருமணம் செய்தால் முண்டச்சி வீட்டில் இருந்து எதுவும் கொண்டு வர மறுக்கிறாள் என வன்சொல் பேசி விரட்டி விடுவார்கள். 1-ம் எதிர்மனுதாரர் விடுமுறையில் வரும் தகவலை சொல்வதில்லை. 3-ம் நபர் மூலம் தெரிந்து 1-ம் மனுதாரர் சென்றாலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அதிக நகை பணம் கொண்டு வராமல் உனக்கு இங்கு வேலை இல்லை. உன் ஆத்தா வீட்டிற்கு சென்றுவிடு என்று திட்டி, கணவருடன் பேசவிடாமல், 5-ம் எதிர்மனுதாரரை நெருங்க பழகவிட்டு வந்தனர். சாப்பாடு கூட பரிமார விடமாட்டார்கள். 2-ம் மனுதாரர் பிறந்து அதிக இரத்தப்போக்கால் உயிருக்கு போராடிய நிலைமையிலும், 1-ம் மனுதாரரின் தாயார் தான் செலவு செய்து காப்பாற்றினார். எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களை பார்க்கவில்லை. பல நாட்கள் கழித்து வந்த 1-ம் எதிர்மனுதாரரும் மனு அருந்திவிட்டு தகாத வார்த்தை பேசி மிரட்டி சென்றார். உறவினர்கள் மூலம் பேசி எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு சென்று வாழ்ந்த போது, எதிர்மனுதாரர்கள் திட்டி துன்புறுத்தி விரட்டி விட்டு, தப்பிக்க வேண்டி மானாமதுரை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 1-ம் எதிர்மனுதாரர் பொய்யாக புகார் கொடுத்தார். காவல்துறை விசாரணையில் எதிர்மனுதாரர்களின் புகார் பொய்யானது என்று தெரிய வந்து

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:38:37 +0530

எச்சரிக்கப்பட்டனர். அதன்பேரில் மனுதாரர்களை அழைத்துச் சென்ற எதிர்மனுதாரர்கள் வரதட்சனை கேட்டு, அடித்து 1-ம் மனுதாரருக்கு தொடையில் காயம் ஏற்படுத்தி, குழந்தையை பறித்துக் கொண்டு, விரட்டி விட்டனர். இது தொடர்பாக 15.09.2015-ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குழந்தையை மீட்டு 1-ம் மனுதாரரிடம் கொடுத்தார்கள். அந்த விசாரணையில் எதிர்மனுதாரர்கள் எச்சரிக்கப்பட்டு அதன் பேரில் மனுதாரர்களை 1-ம் எதிர்மனுதாரர் அழைத்துச் சென்றனர். 3 மாதங்கள் மட்டுமே ரூ.5000/- மாத செலவிற்கு கொடுத்த 1-ம் எதிர்மனுதாரர் அதன் பின்பு மற்ற எதிர்மனுதாரர்கள் பேச்சைக் கேட்டு கொண்டு பணம் அனுப்பவில்லை.

2(iii). 2, 3 எதிர்மனுதாரர்கள் 1-ம் மனுதாரரின் தாயாரிடம் வீடு வாங்க பணம் வாங்கி வரும் படி துன்புறுத்தி அடித்தார்கள். 1-ம் எதிர்மனுதாரரும் உருட்டுக் கட்டையால் தாக்கி அரிவாளால் வெட்டி கொலை செய்ய முயன்றார். அதுசமயம் வன்னிக்கோட்டை கிராம மக்கள் காப்பாற்றி தாயார் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். இது தொடர்பாக 30.07.2016-ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்து விசாரணையில் 1-ம் எதிர்மனுதாரர் துன்புறுத்தல் இல்லாமல் வாழ வைப்பதாக உறுதியளித்தார். அதுசமயம் பணியில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதால் முழு சம்பளம் பெறும் போது மனுதாரர்களை அழைத்துச் சென்று வைத்துக் கொள்வதாக உறுதி முழு சம்பளம் பெறும் போது மனுதாரர்களை அழைத்துச் சென்று வைத்துக் கொள்வதாக உறுதி மொழியளித்தவர் இன்று வரை வந்து அழைத்துச் செல்லவில்லை. மனுதாரர்கள் சென்றாலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களை கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுகிறார்கள்.

2(iv). 1-ம் எதிர்மனுதாரர் 5-ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து, மனுதாரர்களை விட்டு தன்னிச்சையாக வாழ்ந்து வருகிறார். பொய்யான தகவல்களை கூறி சிவகங்கை குடும்பநல

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:38:45 +0530

நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.எண்.134/2017 தாக்கல் செய்து அம்மனுவும் 09.08.2018-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் 14.11.2018-ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் விசாரணையில் வாழ வைக்க முடியாது என்றும், நீதிமன்றம் பரிகாரம் கொள்ள தெரிவித்தனர். எனவே மனுதாரர்கள் வாழ்க்கை பொருள் உதவியாக ரூ.24,000/- 1-ம் எதிர்மனுதாரரை கொடுக்க உத்தரவிட்டும், மொத்தம் 50 பவுன் நகை, ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர் வரிசை பொருட்கள், இருசக்கர வாகனம் வாங்கக் கொடுத்த ரூ.80,000/- திருமண செலவிற்காக கொடுத்த ரூ.2 லட்சம் ஆகியவற்றை திரும்ப பெறக் கோரியும், திருப்புவனம் தாலுகா வன்னிக்கோட்டை காலனி, கதவு எண்.4/166 ல் குழந்தையுடன் குடியிருக்க பாதுகாப்பு கட்டளை கோரி குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவு 12-ன் கீழ் மனுதாரர்களால் இவ்வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர்கள் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-**

3(i). 1-ம் மனுதாரர் மற்றும் 1-ம் எதிர்மனுதாரருக்கு நடந்த திருமணம் மட்டும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. திருமணத்தின் போது 60 பவுன் நகை, இருசக்கர வாகனத்திற்கு ரூ.80,000/- திருமண செலவிற்கு ரூ.2 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் அளிக்கப்பட்டதாக கூறுவது மறுக்கப்படுகிறது. பல்சர் வாகனமானது திருமணம் முடிந்து 4 ஆண்டுகளுக்கு பிறகு 09.09.2015-ம் தேதி மதுரை கே.கே.நகர். பாலமுருகன் மோட்டர்ஸ் நிறுவனம் மூலமாக 1-ம் எதிர்மனுதாரர் வாங்கினார். திருமணத்தின் போது 30 பவுன் நகை மனுதாரர் அணிந்து வந்ததற்கு ஆதரவாக சீர்வரிசை நோட்டு உள்ள நிலையில் 60 பவுன் நகையும், 3 லட்சம் சீர்வரிசை பொருட்கள் கொண்டு வந்ததாகவும், அதில் 40 பவுன் நகையும், 3 லட்சம் சீர்வரிசை பொருட்கள் கொண்டு வந்ததாகவும், அதில் 40 பவுன்

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:38:58 +0530

நகையை 2, 3 எதிர்மனுதாரர்கள் பறித்து வைத்துக் கொண்டதாக கூறுவது ஏற்புடையதாக இல்லை. மனுதாரரின் நகை மொத்தமும் 1-ம் மனுதாரர் வசம் உள்ளது. கூட்டுக் குடும்பத்துடன் சேர்ந்து இருந்ததாகவும், 1-ம் எதிர்மனுதாரர் பணிநிமித்தம் சென்ற பின்பு 2, 3 எதிர்மனுதாரர்கள் வன் சொற்கள் பேசி, மீண்டும் வந்தாள் மீண்டும் திட்டி விரட்டி விடுவதாகவும், கூடுதல் நகை கேட்டு விரட்டி விடுவதாக கூறுவது உண்மையல்ல. 1-ம் எதிர்மனுதாரர் ஊருக்கு வரும் தகவல் தெரிவிப்பது இல்லை என்பதும், 1-ம் எதிர்மனுதாரர் வந்தாலும் வீட்டிற்கு வரவிடாமல் கூடுதல் பணம், நகை வாங்கி வரும்படி மிரட்டியதாக கூறுவது பொய். மனுவில் கூறியது போல் ஒரு போதும் நடைபெற்றதில்லை. 5-ம் எதிர்மனுதாரரை வழக்கில் சேர்க்கவும், மிரட்டவும், பழி வாங்கவும் வீண் பழி சுமத்தவும் கூறப்பட்டுள்ளது. குழந்தை பிறந்த போது உடல் நலிவுற்று இருந்த 1-ம் மனுதாரரை பார்க்க வரவில்லை என்று கூறுவதும், பல நாட்கள் கழித்து 1-ம் எதிர்மனுதாரர் வந்த திட்டியதாக கூறுவது ஏற்புடையதாக அல்ல. குழந்தை பிறந்த தகவலே சொல்லவில்லை. குழந்தை பிறந்த விவரம் தெரிந்து பார்க்க சென்ற எதிர்மனுதாரர்களை 1-ம் மனுதாரரின் தாயார் அனுமதிக்கவில்லை. உறவினர்களை வைத்து பேச்சு வார்த்தை நடத்திய பின்பே குழந்தையை பார்க்க அனுமதித்தார்கள்.

3(ii). மேலும் அடித்து துன்புறுத்திறகது தொடர்பாக புகார் அளித்தாகவும், காவல்நிலைய விசாரணையில் கண்டித்து அனுப்பியதாகவும், மீண்டும் அடித்து துன்புறுத்தி குழந்தையை பறித்துக் கொண்ட மனுதாரரை விரட்டியதற்கு 15.09.2015-ல் புகார் அளித்து விசாரணையில் குழந்தையை எதிர்மனுதாரர்களிடம் வாங்கி 1-ம் மனுதாரரிடம் ஒப்படைத்ததாகவும், எச்சரித்தாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. மாதம் ரூ.5000/- வீதம் 3 மாதம் மட்டும் கொடுத்ததாகவும், பின்னர் நிறுத்திவிட்டதாகவும் கூறுவது கற்பனையானது.

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:39:07 +0530

வீடு வாங்க பணம் வாங்கி வரச் சொல்லி வற்புறுத்தி உருட்டுக் கட்டையால் அடித்து அருகில் உள்ளவர்கள் தடுத்து தாயார் வீட்டிற்கு அனுப்பி வைத்தது தொடர்பாக 30.07.2016-ம் தேதி கொடுத்த புகாரில் சேர்ந்து வாழ்வதாக சொல்லிவிட்டு வேண்டுமென்றே புறக்கணித்ததாகவும் மனுதாரர்கள் மிரட்டுவதாகவும் கூறுவது பொய்யானவை. மனுதாரரும் 1-ம் எதிர்மனுதாரரும் தனிவீட்டிலும், 2, 3 எதிர்மனுதாரர்கள் மற்றொரு வீட்டிலும், 4, 5 எதிர்மனுதாராகள் 3-வது தனி வீட்டிலும் வாழ்ந்து வருகிறார்கள். 1-ம் மனுதாரர் திருமணத்திற்கு முன்பு கல்லூரியில் பணிபுரிந்து மாதம் ரூ.10,000/- வருமானம் பெற்று வந்தார். தற்போது தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.20,000/- சம்பளம் பெற்று வருகிறார். 1-ம் மனுதாரரின் தாயார் மாதம் ரூ.70,000/- சம்பளம் பெற்று வருகிறார். 2-ம் மனுதாரரை பராமரிக்கும் கடமை 1-ம் மனுதாரருக்கும் உள்ளது. குழந்தையை பார்க்கவிடாமல் 1-ம் மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் புறக்கணித்து வருகிறார்கள். குழந்தையை ஒப்படைக்கும் பட்சத்தில் நல்ல முறையில் பாதுகாத்து பராமரிக்க தயாராக உள்ளார். திருமணத்தின் போது மனுதாரரின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட ரூ.80,000/- இன்று வரை மனுதாரர் வசமே உள்ளது. வன்னிக் கோட்டை கதவு எண்.4/166 வீட்டை பூட்டி சாவியை 1-ம் மனுதாரர் தன் கைவசம் வைத்துள்ளார். 1-ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் வீட்டை பூட்டி சாவியை வைத்துக் கொண்டு 1-ம் எதிர்மனுதாரரை புறக்கணித்து வருகிறார். பொய்யான காரணங்கள் கூறி மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1-ஆக இளவரசி விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1-ஆக ஜான்கென்னடி விசாரணை

செய்யப்பட்டுள்ளார். எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5) விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையின் விபரம்:-</u>**

1-ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு மாத ஜீவனாம்சமாக மாதம் தலா ரூ.10,000/- வீதம் ரூ.20,000/-ஸ்ரீ இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து செலுத்த வேண்டும் என்றும், மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து உத்தரவு தேதி வரையிலான ஜீவனாம்ச நிலுவைத் தொகையை மூன்று தாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், மாதாந்திர ஜீவனாம்சத்தை ஒவ்வொரு ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் எதிர்மனுதாரர் நேரிடையாகவோ, அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ செலுத்த வேண்டும் என்றும், வன்னிக்கோட்டை காலனி, கதவு எண்.4/166 வீட்டில் மனுதாரர்கள் வாழ வசிப்பிட கட்டளை வழங்கியும், வன்னிகோட்டை காலனி, கதவு எண்.4/166 வீட்டில் உள்ள மகுதாரது சீர் வரிசை பொருட்களை தீர்ப்புத் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள் ஒப்படைக்க வேண்டும் என்றும், மனுதாரர்களுக்கு 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ரூ.20,000/- இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் 50 சவரன் தங்க நகைகள், இருசக்கர வாகனம் வாங்கக் கொடுத்த ரூ.80,000/- திருமண செலவிற்காக கொடுத்த ரூ.2,00,000/- திரும்பக் கேட்டுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் உத்தரவிடப்பட்டது.

**<u>6) மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:-</u>**

6(i). 1-ம் மேல்முறையீட்டாளர் மத்திய ரயில்வே போலீஸ் படையில் காவலராக பணிபுரிந்து அவருக்கு மிகக் குறைந்த அளவிலான சம்பளம் பெற்று வருகிறார். 1-ம்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:39:21 +0530

மேல்முறையீட்டாளர் 01.02.2023-ம் தேதியின் படி ரூ.26,395/- மாதசம்பளம் பெறுகிறார். இவ்வளவு குறைந்த வருமானத்தை கருத்தில் கொள்ளாமல், கீழமை நீதிமன்றம் ஒவ்வொரு எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/- பராமரிப்பு தொகை நிர்ணயித்துள்ளது. இது மிகவும் அதிகமாகவும், 1-ம் மேல்முறையீட்டாளர் அவரது தினசரி வாழ்க்கைச் செலவுகளை கூட சமாளிக்க முடியாத நிலையை உருவாக்குகிறது. வீட்டு எண் 4/166, வன்னிக்கோட்டை, திருப்புவனத்தில் உள்ள சொத்து 3-ம் மேல்முறையீட்டாளர் பெயரில், 28.03.2003 அன்று ஆவண எண் 406/2003 மூலம் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்தின் அடிப்படையில் வாங்கப்பட்ட சொத்து ஆகும். அந்த சொத்து முழுமையாக 3-ம் மேல்முறையீட்டாளருக்கே சொந்தமானது. முதல் மேல்முறையீட்டாளருக்கு அதில் எந்த உரிமையும் இல்லை. இந்நிலையை கருத்தில் கொள்ளாமல், கீழமை நீதிமன்றம் எதிர்மனுதாரகளுக்கு அந்த வீட்டில் தங்க அனுமதி வழங்கியிருப்பது தவறானது.

6(ii). மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது படி மனைவிக்கு பராமரிப்பு தொகை வழங்கும்போது, கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கான உண்மையான முயற்சி எடுத்தாரா? என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வழக்கில், 1-ம் மனுதாரர் அவருக்கு சாதகமாக உத்தரவு பெற்றிருந்தாலும், கணவருடன் மீண்டும் இணைவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இது, பராமரிப்பு தொகை பெறுவதற்காக மேல்முறையீட்டாளரை தொந்தரவு செய்வதற்கான நோக்கத்தையே காட்டுகிறது. இதனை கீழமை நீதிமன்றம் முறையாக பரிசீலிக்கவில்லை. மேலும், Rajnesh Vs Neha (Crl.A.No.730/2020, SLP (Crl.No.9503/2018) வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பராமரிப்பு வழக்குகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அந்த

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:39:30 +0530

வழிகாட்டுதலின்படி, மேல்முறையீட்டாளரும், எதிர்மேல்முறையீட்டாளரும் அவர்களின் வருமானம், சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவரங்களை அஃபிடவிட் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், இவ்வழக்கில் அந்த நடைமுறைகள் பின்பற்றப்படாமல், கீழமை நீதிமன்றம் நேரடியாக மனுவை அனுமதித்துள்ளது. எனவே கீழமை நீதிமன்றம் வழங்கிய காரணங்களும் முடிவும் சட்ட ரீதியாக தவறானவை. முதல் மேல்முறையீட்டாளரின் வருமானம் மற்றும் பொருளாதார நிலையை ஒப்பிடுகையில், நிர்ணயிக்கப்பட்ட பராமரிப்பு தொகை மிக அதிகமாக உள்ளது.

7) இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால்? இம்மனு அனுமதிக்கப்பட்டு DVC No. 6/2019-ல் மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனத்தில் கடந்த 28.03.2023-ம் தேதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து இம்மனு அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும் ?

**<u>8) தீர்வு:-</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. எதிர் மேல்முறையீட்டாளர்/மனுதாரர் சார்பில் மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்/மனுதாரர்களுக்கு அத்தியாவசிய தேவைகளுக்குகாக மாதம் ஜீவனாம்சம் தலா ரூ.12,000/-மும், எதிர் மேல்முறையீட்டாளர்/ மனுதாரருக்கு திருமணத்தின் போது அணிவித்த 40 பவுன் தங்க நகையும், 1-ம் மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரருக்கு அணிவித்த 10 பவுன் தங்க நகையும் சேர்த்து மொத்தம் 50 பவுன் தங்க நகையும் மற்றும் 3 லட்சம் மதிப்புள்ள சீர் சீதன பொருட்களையும் பல்சர் வாகனம் வாங்குவதற்காக கொடுத்த ரூ.80,000/- ரொக்கம் திருமணம் செலவிற்காக கொடுத்த ரூ.2 லட்சம் ஆக மொத்தம் ரூ.2,80,000/-த்தையும், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், வன்னிக்கோட்டை

காலனியில் உள்ள கதவு எண்.4/166-ல் உள்ள வீட்டில் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்கள் குடியிருப்பதை மேல்முறையீட்டாளர் /எதிர்மனுதாரர்கள் எவ்வித பிரச்சனை செய்யாமல் இருக்க பாதுகாப்பு கட்டளை வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் இதர பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மேற்கண்ட மனுவில் மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனத்தில் கடந்த 28.03.2023-ம் தேதி மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர், எதிர் மேல்முறையீட்டாளர்கள்/ மனுதாரர்களுக்கு மாதம் தலா ரூ.10,000/- மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து உத்தரவு தேதி வரை 3 மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் ஒவ்வொரு மாத ஜீவனாம்சம் தொகையை ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் வன்னிக்கோட்டை காலனி கதவு எண்.4/166-ல் வீட்டில் உள்ள எதிர் மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்களுக்கு வாழ வசிப்பிட கட்டளை வழங்கியும், வன்னிக்கோட்டை காலனி கதவு எண்.4/166-ல் வீட்டில் உள்ள 1-ம் எதிர் மேல்முறையீட்டாளரின் சீர்வரிசை பொருட்களை தீர்ப்பு தேதியிலிருந்து 1 மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்றும், மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரர்கள், எதிர் மேல்முறையீட்டாளர்கள்

/மனுதாரர்களுக்கு ரூ.20,000/- இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 1-ம் எதிர் மேல்முறையீட்டாளர்கள்/ மனுதாரர் 50 சவரன் தங்க நகையும், இரு சக்கர வாகனம் வாங்க கொடுத்த ரூ.80,000/-, திருமணச் செலவிற்கு கொடுத்த ரூ.2 லட்சம் ஆகிய பரிகாரங்களை குறித்து தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவை எதிர்த்து

மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர் மேல்முறையீட்டாளர்கள்/மனுதாரர்களுக்கு 50 சவரன் தங்க நகையும், இரு சக்கர வாகனம் வாங்க கொடுத்த ரூ.80,000/-, திருமணச் செலவிற்கு கொடுத்த ரூ.2 லட்சம் ஆகியவற்றை திரும்ப கேட்ட பரிகாரத்தை தள்ளுபடி செய்த உத்தரவிற்கு எதிராக எதிர் மேல்முறையீட்டாளர்கள் /மனுதாரர்கள் தரப்பில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10)** 1-ம் எதிர் மேல்முறையீட்டாளர்/1-ம் மனுதாரருக்கும், 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 01.09.2011-ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் புதூர், முஸ்லீம் மகாலில் வைத்து உற்றார் உறவினர்கள் முன்னிலையில் ஜாதி வழக்கப்படி திருமணம் நடைபெற்று அந்த திருமணம் திருப்புவனம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 30.01.2011 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த திருமண அழைப்பிதழின் அசல் ம.சா.ஆ.1, திருமண புகைப்படம் (எண்ணம்2) ம.சா.ஆ.2, திருமண பதிவு சான்று ம.சா.ஆ.4, மற்றும் திருமண புகைப்படம் எ.ம.சா.ஆ.4 என்பதை பொருத்தமட்டிலும் இரு தரப்பிலும் பிரச்சனை இல்லை. 1-ம் மேல்முறையீட்டாளருக்கும் 1-ம் எதிர்மனுதாரருக்கும் 01.09.2011-ம் தேதி திருமணம் நடந்து திருமணத்தின் பலனாக 10.12.2014-ம் தேதி 2-ம் எதிர்மனுதாரர்/ 2-ம் மனுதாரர் பிறந்தார் என்பதை பொருத்தமட்டிலும் இரு தரப்பிலும் பிரச்சனை இல்லை.

**11)** 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரர் அவரது சாட்சி பரிமாண வாக்குமூலத்திலும் திருமணம் முடிந்து மாமனார் வீட்டிற்கு சென்ற போது, அவரது மாமனாரும், மாமியாரும் மற்றும் கணவரின் சகோதரர், சகோதரியும் ஒன்றாக கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்கள். அவரது கணவர் பணி நிமித்தமாக சென்றவுடன் அவரது மாமனாரும் மாமியாரும் ஏதாவது

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:39:59 +0530

கடும் சொற்கள் பேசி திட்டி தாயார் வீட்டிற்கு விரட்டி விடுவார்கள் என்று சொல்லியுள்ளார். இவ்வாறு பிரச்சனை ஏற்பட்ட நிலையில், பிரச்சனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பொய்யாக புகார் மனு கொடுத்திருந்தார். அந்த புகார் மனுவில் விசாரணையில் மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்களின் தவறான செயல்கள் தெரிய வந்தது. அதனால் மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அறிவுரை கூறி கண்டித்து அனுப்பி வைத்தார்கள் என்று சொல்லியுள்ளார். அதன் பிறகும் வரதட்சணை கேட்டு அடித்தும், குழந்தையை பறித்து வைத்து கொண்டு மிரட்டி விட்டது சம்பந்தமாக 15.09.2015-ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குழந்தையை மீட்டுக் கொடுத்ததாக சொல்லியுள்ளார். 30.07.2016-ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து விசாரணை மேற்கொண்டதாக சொல்லியுள்ளார். 30.07.2016-ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் புகார் மனு நகல் ம.சா.ஆ.5 ஆகவும், மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் புகார் மனு ரசீது எண்.337/2015 ம.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.5-ன் படி 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரர் 15.09.2015-ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். ம.சா.ஆ.5 புகாருக்கு ம.சா.ஆ.6 மனு ரசீது 15.09.2015-ம் தேதி வழங்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6-ன் படி 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரரை மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்கள் காரணம் இல்லமல் அடித்து பிரச்சனை செய்ததாக அவர்களை அழைத்து கண்டித்து அனுப்பியதாக கொடுக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 புகார் 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரர் 30.07.2016-ம் தேதி சிவகங்கை மாவட்ட

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:40:07 +0530

காவல் கண்காணிப்பாளரிடம் மேல்முறையீட்டாளர்கள்/ எதிர்மனுதாரர்கள் கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளார்.

**12)** 1-ம் மேல்முறையீட்டாளர்/ 1-ம் எதிர்மனுதாரர் சார்பில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து அதனுடைய ரசீது மற்றும் கோப்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று எ.ம.சா.ஆ.6, எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.6, எ.ம.சா.ஆ.7 ஆவணங்களின் படி 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரர் மீது மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மனு ரசீது வழங்கி விசாரணை செய்து அந்த விசாரணையில் 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரர், 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர் சென்னையில் தனியாக வீடு எடுத்து அழைத்து சென்று அங்கு சென்று வாழ்வதாக எழுதி கொடுத்து அந்த மனு முடிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் 1-ம் மேல்முறையீட்டாளர் /1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரர் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்வதால் அவரை அழைத்து கண்டித்து சேர்த்து வைத்ததாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரருக்கும், 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரருக்கும் கடந்த 2015-ல் பிரச்சனை ஏற்பட்டு சேர்ந்து வாழாமல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்து அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் 1-ம் மேல்முறையீட்டாளர்/ 1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி HMOP.No.134/2017 தாக்கல் செய்து தள்ளுபடி ஆகியுள்ளதாக ம.சா.ஆ.7 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7-ன் படி 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி சிவகங்கை குடும்ப நல நீதிமன்றத்தில் மனு கொடுத்து அந்த மனு HMOP No. 134/2017 ஆக கோப்பிற்கு

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:40:18 +0530

எடுக்கப்பட்டு கடந்த 09.08.2018-ம் தேதி தள்ளுபடி ஆகியுள்ளது. அதன் பிறகு 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரர் அவரை 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்து அந்த புகார் மனு ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்படுகிறது. எனவே, 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர் கடந்த 2015-ம் ஆண்டிலிருந்து பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்த பிறகு 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரருக்கு விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி ஆகியுள்ளது. இந்நிலையில் 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரர் இந்த மனுவில் கடந்த 15.09.2015-ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பின்பு சமரசம் பேசி அனுப்பியதன் பேரில் மூன்று மாதம் மட்டும் ரூ.5000/- செலவிற்காக கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளார். 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரருக்கு பிரச்சனை ஏற்பட்ட காலத்திற்கு பிறகு ஜீவனாம்சம் தொகை மூன்று மாதம் மட்டும் கொடுத்ததாக சொல்லியுள்ளார். மாறாக 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர்/1-ம் மனுதாரர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.20,000/- சம்பளம் பெறுவதாக சொல்லியுள்ளார். ஆனால் எந்த தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார் என்று சொல்லவில்லை, அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.20,000/- சம்பளம் பெறுகிறார் என்பது ஏற்றுக் கொள்ளகூடியது இல்லை. 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர் ரயில்வே காவல் துறையில் பணிபுரிகிறார் என்பதும் பிரச்சனை இல்லை. மாதம் எவ்வளவு சம்பளம் பெறுகிறார் என்பதற்கான சம்பள சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே இந்நிலையில் ஒரு நபருக்கு மாதம் ரூ.10,000/- செலவு சாதாரணமாக தேவைப்படுகிறது. எதிர்மனுதாரர்கள்

/மனுதாரகளுக்கு மாதம் தலா ரூ.10,000/- மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உள்ள உத்தரவில் எவ்வித குறையும் இல்லை. அது நியாயமாகவும், நேர்மையாகவும் தேவையின் அடிப்படையிலே இருப்பதாக கருதப்படுகிறது.

**13)** 1-ம் மேல்முறையீட்டாளர்/1-ம் எதிர்மனுதாரர் கொடுத்துள்ள சாட்சியத்தில் திருப்புவனம் வன்னிக்கோட்டை காலனியில் உள்ள கதவு எண். 4/166 ல் உள்ள வீட்டில் 1-ம் எதிர்மனுதாரர் /1-ம் மனுதாரர் வேண்டுமென்றே சாவியை கைவசம் வைத்துள்ளதாக சொல்லியுள்ளார். அந்த வீட்டில் 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் மனுதாரருக்கு திருமணத்தின் போது அளிக்கப்பட்ட சீர்வரிசை பொருட்கள் உள்ளது என்று சொல்லியுள்ளார். மேலும் மேல்முறையீட்டாளர்களுக்கு சொந்தமாக 3 வீடுகள் உள்ளது என்றும், அதில் ஒரு வீட்டில் 1-ம் மேல்முறையீட்டாளரும்/1-ம் எதிர்மனுதாரரும் தனியாக வாழ்வதாகவும், 2, 3 மேல்முறையீட்டாளர்கள்/2, 3 எதிர்மனுதாரர்கள் வேறொரு வீட்டிலும் 4, 5 மேல்முறையீட்டாளர்கள்/4, 5 எதிர்மனுதாரர்கள் 3-வது தனி வீட்டிலும் வாழ்வதாக சொல்லியுள்ளார். எனவே 2, 3 மேல்முறையீட்டாளர்கள்/2, 3 எதிர்மனுதாரர்கள் ஒரு வீட்டில் தனியாக வாழ்வதாகவும், 4, 5 மேல்முறையீட்டாளர்கள்/ எதிர்மனுதாரர்கள் ஒரு வீட்டில் தனியாக வாழ்வதாகவும், கதவு எண்.4/166 உள்ள வீட்டில் 1-வது மேல்முறையீட்டாளரும் 1-வது எதிர்மனுதாரரும் வாழ்ந்தார்கள் என்று சொல்வதால் அந்த வீட்டில் எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் வாழ்வதற்கு வசிப்பிட கட்டளை வழங்கிய உத்தரவில் எவ்வித குறையும் இல்லை. அது நியாயமாகவும், நேர்மையாகவும் தேவையின் அடிப்படையிலே இருப்பதாக கருதப்படுகிறது. மேலும் கதவு எண்.4/166 உள்ள வீட்டில் 1-ம் எதிர்மனுதாரரின் சீர்வரிசை பொருட்கள் இருப்பதாக சொல்வதால் அந்த வீட்டை திறந்து மேல்முறையீட்டாளர்கள், 1-ம் எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவிலும்,

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.10 18:40:35 +0530

மேல்முறையீட்டாளர்கள், எதிர்மனுதாரர்களும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் தொந்தரவு செய்ததற்காக ரூ.20,000/- இழப்பீடு வழங்க வேண்டும் என்ற உத்தரவில் எவ்வித குறையும் இல்லை. அது நியாயமாக உள்ளது என்று முடிவு செய்கிறேன்.

**14)** எனவே, மேலே விவாதித்தன் அடிப்படையில் இந்த **மேல்முறையீடு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடித்துக் கொள்ளப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:40:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

சிவகங்கை.

**மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:40:49 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

சிவகங்கை.

**நகல்:-**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:40:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

சிவகங்கை

குற்றவியல் மேல்முறையீட்டு

வழக்கு எண்.110/2023

வரைவு / சீரான – தீர்ப்புரை

நாள்.10.04.2026

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:41:02 +0530

**<u>குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.110/2023</u>**

**<u>நாள்: 10.04.2026</u>**

**<u>தீர்ப்புரை பகரப்பட்டது.</u>**

இந்த மேல்முறையீடு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:41:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

சிவகங்கை

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.10 18:41:16 +0530